# தட்டம்மை குறித்த தகவல் தாள்

**தட்டம்மை பாதிப்புகளும் திடீர் நோய்த்தாக்கங்களும் கனடாவில் இன்னும் நிகழ்கின்றன.** வழக்கமாக, தடுப்பூசி போட்டுக்கொள்ளாத ஒருவர் தட்டம்மை நோய்ப்பரவல் உள்ள ஒரு நாட்டிற்குப் பயணம் செய்யும்போது அல்லது அங்கிருந்து வரும்போது அவர் நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்டவராக இருக்கிறார். அதன் பின் அது கனடாவில் உள்ள தடுப்பூசி போட்டுக்கொள்ளாத அல்லது முந்தைய நோய்த்தொற்றில் இருந்து நோய்த்தடுப்புத் திறனைப் பெற்றிருக்காத மக்களிடையே பரவுகின்றது.

## அறிகுறிகள்

- ஆரம்ப அறிகுறிகள் இவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்: காய்ச்சல், இருமல், மூக்கு ஒழுகுதல், சிவந்த, நீர் வடியும் கண்கள்.
- அறிகுறிகள் தொடங்கிய பிறகு சுமார் 3 முதல் 7 நாள்களில், முகத்தில் உருவாகும் **சினப்பு** புஜங்கள் மற்றும் கால்கள் உட்பட, உடலின் பிற பாகங்களுக்கு பரவுகின்றது. சிவப்புப் புள்ளிகளைப் போலவும், படை போலவும் தோற்றமளிக்கும் இந்தச் சினப்பு, 4 முதல் 7 நாள்களுக்கு நீடிக்கின்றது. தோலின் நிறம் கருப்பாக இருப்பவர்களுக்கு, தோல் சிவத்தல் கண்ணுக்குப் புலப்படாமல் இருக்கலாம், அல்லது அது ஊதா நிறத்திலோ அல்லது சுற்றிலும் உள்ள தோலை விட அடர்நிறமாகவோ இருக்கலாம்.

## ஆபத்துகள்

**தட்டம்மைத் தொற்றினால் பாதிக்கப்பட்ட எவருக்கும் சிக்கல்கள் ஏற்படலாம். தட்டம்மைத் தொற்றினால் கடுமையான சிக்கல்கள் ஏற்படுவதற்கான அதிக அபாயம் கொண்டவர்கள்:**

- 5 வயதுக்குக் குறைவான குழந்தைகள், குறிப்பாக தடுப்பூசி போடப்பட வேண்டிய மிகவும் இளவயதுக் குழந்தைகள்
- கர்ப்பிணிகள
- பலவீனமான நோயெதிர்ப்பு அமைப்புகளைக் கொண்டவர்கள்

ஆயினும் அரிதான, கடுமையான சிக்கல்களில் காது கேளாமை மற்றும் மூளையின் அழற்சியால் ஏற்படும் மூளைக் காயம் ஆகியவை அடங்கும். மேலும் இவை உயிரிழப்பைக் கூட ஏற்படுத்தலாம்.

நீங்கள் தட்டம்மை பாதிப்புக்கு ஆளாகியிருந்து உங்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி இல்லாமலிருந்தால், **உங்களுக்கு தட்டமை நோய் ஏற்படும் அபாயம் உள்ளது.** நோய் எதிர்ப்புச் சக்தி பெற நீங்கள்:

- தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும் **அல்லது**
- இதற்கு முன் ஆய்வகத்தில் உறுதிப்படுத்தப்பட்ட தட்டம்மைத் தொற்றினால் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது தட்டம்மைக்கான நோய் எதிர்ப்புச் சக்தி இருப்பதற்கான ஆய்வகச் சான்றைக் கொண்டிருக்க வேண்டும்.



## தட்டம்மை மிகவும் தொற்றுத்தன்மை கொண்டது

**தட்டம்மைக்கான நோய் எதிர்ப்புச் சக்தி இல்லாத, வைரஸுடன் தொடர்பு பெறுகின்ற 90% பேர் நோய்த்தொற்றினால் பாதிக்கப்படுகின்றனர்.** தட்டம்மையால் பாதிக்கப்பட்டவர்கள் தோல் தடிப்பு தோன்றுவதற்கு முன்னரே, தங்களுக்கு தட்டம்மைத் தொற்று ஏற்பட்டுள்ளது என்பதைத் தெரிந்துகொள்வதற்கு முன்னரே அதை மற்றவர்களுக்குப் பரப்பக்கூடும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் மாகாண அல்லது பிராந்தியத் தடுப்பூசி அட்டவணையின்படி அவர்களுக்குத் தட்டம்மையை உள்ளடக்கிய தடுப்பூசி போடப்பட்டிருப்பதை உறுதிசெய்யுமாறு வலியுறுத்தப்படுகின்றனர்.

## தட்டம்மையைத் தடுத்தல்

- தட்டம்மையை வழக்கமான தடுப்பூசிகள் மூலம் தடுக்க முடியும், பொதுவாக இது 12 மாத வயதிலிருந்து தொடங்குகின்றது. நீங்களோ அல்லது உங்கள் குழந்தையோ ஒரு தடுப்பூசியைத் தவறவிட்டிருந்தாலும் கூட, நீங்கள் அதைப் போட்டுக்கொள்ள முடியும்.
- தட்டம்மை கொண்ட தடுப்பூசியை 2 டோஸ்கள் போட்டுக்கொள்வது தட்டம்மையைத் தடுப்பதில் பெரும்பாலும் 100% பயனுள்ளதாக இருக்கின்றது. குழந்தைகள், வளரிளம் பருவத்தினர் மற்றும் சில வயதுவந்தவர்களுக்கு தட்டம்மையைக் கொண்டுள்ள தடுப்பூசியின் இரண்டு டோஸ்கள் பரிந்துரைக்கப்படுகின்றன. உங்கள் மாகாணத்தின் அல்லது பிராந்தியத்தின் தட்டம்மைத் தடுப்பூசிக்கான பரிந்துரைகள் குறித்து உங்கள் சுகாதாரப் பராமரிப்பு வழங்குநர் அல்லது உள்ளூர் பொது சுகாதாரத் துறையிடம் கேட்கவும்.
- நீங்கள் கனடாவிற்கு வெளியில் பயணம் செல்லத் திட்டமிட்டிருந்தால், நீங்கள் நாளது வரை எல்லாத் தடுப்பூசிகளையும் போட்டிருக்கிறீர்களா எனப் பார்க்க அல்லது தட்டம்மை கொண்ட தடுப்பூசியின் கூடுதல் டோஸ்கள் உங்களுக்குத் தேவைப்பட்டால் பயணத்திற்கு 6 வாரங்களுக்கு முன்னதாக ஒரு சுகாதாரப் பராமரிப்பு வழங்குநரிடம் அல்லது உள்ளூர் பொது சுகாதாரத் துறையிடம் பேசுவது விரும்பத்தக்கது.

### நீங்கள் தட்டம்மை பாதிப்புக்கு உள்ளாகியிருக்கலாம் அல்லது தட்டம்மையால் பாதிக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதினால்

- நீங்களோ அல்லது உங்கள் குடும்பத்தினரோ தட்டம்மையின் **பாதிப்புக்கு உள்ளாகியிருக்கலாம்** என நீங்கள் கருதினால், நீங்கள் தடுப்பூசி போட்டிருக்காவிட்டால் (அல்லது கடந்தகாலத்தில் உங்களுக்கு தட்டம்மைத் தொற்று ஏற்பட்டிருக்காவிட்டால்), உங்களைத் தனிமைப்படுத்திக்கொள்ளவும். வழிகாட்டுதலுக்கு உடனடியாக உங்கள் சுகாதாரப் பராமரிப்பு வழங்குநரை அல்லது உள்ளூர் பொது சுகாதாரத் துறையைத் தொடர்புகொள்ளவும்.
- உங்களிடம் தட்டம்மைக்கான **அறிகுறிகள்** தென்பட்டால், உங்களைத் தனிமைப்படுத்திக்கொண்டு, உடனடியாக சுகாதாரப் பராமரிப்பு வழங்குநரை அழைக்கவும். மற்றவர்களுக்கு அது பரவாமல் தடுக்கும் அதே நேரத்தில், சுகாதாரப் பராமரிப்பு வழங்குநர் உங்களைப் பார்க்க ஏற்பாடு செய்யலாம்.

## தட்டம்மை பரவுவதை நிறுத்த உதவவும்.

**பரிந்துரைக்கப்பட்ட தடுப்பூசிகள் எல்லாவற்றையும் போட்டிருக்கிறீர்கள் என்று உங்களுக்கோ அல்லது உங்கள் குடும்பத்தினருக்கோ உறுதியாகத் தெரியவில்லை என்றாலும், ஏதேனும் தவறவிட்ட தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்ள விரும்பினாலும் சுகாதாரப் பராமரிப்பு வழங்குநரிடம் அல்லது உங்கள் உள்ளூர் பொது சுகாதாரத் துறையிடம் பேசவும். கூடுதல் தகவல்களுக்கு, Canada.ca/measles-ஐப் பார்வையிடவும்.**

© கனடாவில் பதிப்பேொறுப்பில் உள்ள மாண்புமிகு அரசர், சுகாதார அமைச்சரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது, 2025
Pub: 240930 | Cat: H14-619/2025Tam-PDF | ISBN: 978-0-660-76194-7